*புதுச்சேரி அரசு*

*துணைநிலை ஆளுநர் செயலகம்*

**No. LGS/PRO/2025** **09 சூன், 2025**

## பத்திரிகை செய்தி

புதுச்சேரி சட்டப்பேரவையை காகிதம் இல்லா சட்டப்பேரவையாக மற்றும் விதமாக தேசிய இ-விதான் செயலி தொடக்க விழா அக்கார்டு ஓட்டலில் இன்று (09-06-2025) நடைபெற்றது. மாண்புமிகு மத்திய பாராளுமன்ற விவகாரங்கள்துறை இணையமைச்சர் திரு எல் முருகன் குத்துவிளக்கேற்றி இ-விதான் செயலியை தொடங்கி வைத்தார். மாண்புமிகு துணைநிலை ஆளுநர் திரு K. கைலாஷ்நாதன் விழா தலைமை ஏற்றார்.

மாண்புமிகு முதலமைச்சர் திரு ந. ரங்கசாமி, சட்டப்பேரவைத் தலைவர் திரு R. செல்வம், மாண்புமிகு பொதுப்பணி அமைச்சர் திரு க. லட்சுமிநாராயணன், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலஅமைச்சர் திரு சாய் ஜெ சரவணன்குமார், மாநிலங்களவை உறுப்பினர் திரு செல்வகணபதி, தலைமைச் செயலர் திரு சரத் சௌகான், மத்திய அமைச்சக செயலர் திரு உமங் நருலா, கூடுதல் செயலர் திரு சத்திய பிரகாஷ், புதுச்சேரி சட்டப்பேரவை செயலர் திரு தயாளன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் துணைநிலை ஆளுநர் ஆற்றிய உரை.

இன்றைய நாள், நமது புதுச்சேரி மாநில சட்டப்பேரவை வரலாற்றில் மிக முக்கிமான நாள். நம்முடைய ஜனநாயகத்தில் ஒரு புதிய பக்கத்தை சேர்க்கும் நாள். “நேவா” என்ற தேசிய இ-விதான் செயலியை (National e-Vidhan Application) அறிமுகம் செய்வதன் மூலமாக, புதுச்சேரி சட்டப்பேரவையை முழுமையாக மின்னணு மயமாக்கும் பரிணாத்தை நாம் எட்டி இருக்கிறோம்.

இது நம்முடைய சட்டப்பேரவை பாரம்பரியத்தை நவீனத்தோடு இணைக்கும் ஒரு முயற்சி. நாட்டிலேயே முன்னோடியாக புதுச்சேரியில் இது செயல்படுத்தப்படுகிறது என்பது பெருமைக்கு உரிய ஒன்று. மற்ற சட்டப்பேரவைகளில் இதை கொண்டு வருவதற்கான முயற்சிகள் இன்னும் நடைபெற்று வரும் நிலையில் முதலில் புதுச்சேரியில் அமைத்துக் கொடுத்த மத்திய அரசுக்கு புதுச்சேரி சார்பில் என்னுடைய நன்றியையும் முதலமைச்சர், பேரவைத் தலைவர் மற்றும் NeVA திட்ட அதிகாரிகளுக்கு என்னுடைய பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய பாராளுமன்றம் அல்லது சட்டமன்றம் என்பது நமது ஜனநாயகத்தின் இருதயம். மக்கள் பிரதிநிதிகள், மக்களின் நலனுக்காக, சட்ட மசோதாக்களை விவாதித்து, தாக்கல் செய்து, நிறைவேற்றும் அரங்கம். அத்தகைய ஒரு உயரிய தருமத்தின் மையமாக இருப்பதை “**டிஜிட்டல் இந்தியாவை**” நோக்கி நகர்த்தும் விதமாக இந்த 'நேவா' செயலி ஒரு தொழில்நுட்பப் புரட்சியை ஏற்படுத்துகிறது.

இதன் நோக்கம், சட்டப்பேரவை நடவடிக்கைகளை முழுமையாக காகிதம் இல்லாத முறையாக PAPERLESS ASSEMBLY-ஆக மாற்றுவதுதான். அதோடு, சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கும் பொதுமக்களுக்கும் இடையே ஒரு வெளிப்படையான தகவல் பரிமாற்றத்தை ஏற்படுத்துவது.

இதில் உள்ள MLA Dashboard வசதி மூலமாக உறுப்பினர்கள் அவர்களுடைய வினாக்கள், சட்ட மசோதா விவரங்கள் உள்ளிட்ட எல்லாவற்றையும் ஒரே இடத்தில் பார்க்க முடியும். பொதுமக்கள் நேரடியாக சட்டப்பேரவை நிகழ்வுகளை பார்க்க முடியும். ஒரு CLICK செய்தால் போதும். அறிவிப்புகள், மசோதாக்கள், தீர்மானங்கள் அனைத்தும் ஆன்லைனில் கிடைக்கும்.

கடந்த சட்டமன்ற விவாதங்கள், வாக்குப் பதிவுகள், அறிக்கைகள் எல்லாவற்றையும் கணினி வழியாக பெற முடியும். இவை எல்லாம் நமக்கு தமிழிலும், ஆங்கிலத்திலும் கிடைக்கும். பிற மொழிகளில் தருவதற்கான முயற்சி எடுக்கப்படுகிறது. பல ஆண்டுகளாக சட்டப்பேரவை நடவடிக்கைகள், ஆவணங்கள் எல்லாம் காகித வடிவத்தில்தான் இருந்தன. ஆனால் இந்த நிலை இப்போது மாறிவிடும்.

இதனால், ஆண்டு ஒன்றுக்கு சுமார் 3 முதல் 5 டன் காகிதம் மிச்சப் செய்யப்படுகிறது. டிஜிட்டல் வடிவில் ஆவணங்களை பாதுகாக்க முடியும். இதனால் செலவுகளும் குறையும். சுற்றுச்சூழல் பாதுகாப்பு பற்றி நாம் அதிக அக்கறை எடுத்துவரும் இன்றைய கால கட்டத்தில் இது மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும். அதுமட்டும் அல்லாமல் மனித உழைப்பும் நேரமும் மிச்சப்படுகிறது.

இதை எல்லாம் கடந்து, இந்த செயலி மாநில நிர்வாகத் திறனை, வெளிப்படைத் தன்மையை அதிகப்படுத்தும். இளைஞர்கள் அரசியல் பற்றிய புரிதலை எளிதாக பெற முடியும். இன்னுமொரு மகிழ்ச்சியான தகவல் என்னவென்றால் இந்த NeVA திட்டம் நாடு முழுவதும் ஒருங்கிணைக்கிறது. தொலைநோக்குப் பார்வை உடைய நமது பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் **DIGITAL INDIA, GOOD GOVERNANCE**, மற்றும் **TRANSPARENT ADMINISTRATION**, **GO GREEN** என்ற குறிக்கோள்களை அடையும் விதமாக இந்த செயலி அமைக்கப்பட்டு இருக்கிறது.

இதனால் நாடு முழுவதும் உள்ள குடிமக்கள், ஒரு சட்டம் எவ்வாறு உருவாகிறது என்பதை தெரிந்து கொள்ள முடியும். உதாரணமாக - அரசியல் நடைமுறைகள், சட்டபேரவை விவாதங்கள், உரையாடல்கள், செயல்பாடுகள் எவ்வாறு அமைகிறது என்பதை புரிந்து கொள்ள முடியும். அரசியல் மீதான நம்பிக்கை, தெளிவு பெற்று நாட்டின் வளர்ச்சியில் பங்கேற்க முடியும்.

அந்த அடிப்படையில், புதுச்சேரி சட்டப்பேரவை வரலாற்றில் ஒரு மைல்கல்லாக அமையும் இந்த NeVA செயலி அறிமுகம் இந்த நூற்றாண்டின் புதிய நிர்வாக நடைமுறையை உருவாக்கும் ஒரு முயற்சி. இது ஒரு சாதனை. ஆனால், தொடக்கம் மட்டுமே.

இந்த திட்டம் முழுமையாக வெற்றி பெற வேண்டும் என்றால் பேரவை உறுப்பினர்களும் பொதுமக்களும் இந்த செயலியை பயன்படுத்தும் முறைகளை தெளிவாக அறிந்து கொள்ள வேண்டும். இளைஞர்கள், மாணவர்கள் இடையே விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

வரும் நாட்களில், மேலும் பல மாநிலங்கள் இந்த திட்டத்தை அவர்களது சட்டபேரவைகளில் கொண்டு வரும். பாராளுமன்ற – சட்டமன்ற செயலிகள் இன்னும் நவீன மயமாகும் என்ற நம்பிக்கையோடு என்னுடைய உரையை முடிக்கிறேன்.